# முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்

## L.A.O.P.No.230/2022

## சாட்சியின் சான்றுரை CW-1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | தேவேந்திரன் | வட்டம் | - | |
| த/பெ | - | மண்ணு கவுண்டர் | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

07.12.2023 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி என்னால் உறுதிமொழி கொடுத்து சாட்சியமளிக்கப்பட்டது.

கோரிக்கைதாரர் சாட்சி 1 மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். அவர் தரப்பில் கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்படுகிறது. கீழ் கண்ட ஆவணங்கள் மனுவின் பேரில் தாக்கல் செய்யப்படுகிறது.

1. நான் பெலாகுப்பம் கிராமத்தின் நில அளவை வரைபடத்தின் கணிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட வரைபடத்தை தாக்கல் செய்கிறேன். அதில் எனக்குண்டான நிலத்தின் சர்வே எண்.64/2 ஆகும். அதை நான் வண்ணமிட்டு காட்டியுள்ளேன். அந்த வரைபடம் கோ.தசாஆ.1.

2. எனது சொத்தில் அரசாங்கம் கட்டிடம் கட்டி கொண்டதற்கான ஜி.பி.எஸ் மேப் கேமரா மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இரண்டை தாக்கல் செய்கிறேன். இதை தாக்கல் செய்வதற்கு பார்வை அலுவலர் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனை பேரில் குறியீடு செய்யப்படுகிறது. அது கோத.சாஆ2

3. வழக்கு சொத்திற்கான வில்லங்கம் அவரபாக்கம் இணை சார்பதிவாளர் 09.11.2023ல் வழங்கப்பட்டது. அதன் கணிணி மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிதழை தாக்கல் செய்கிறேன். அது கோ.தசாஆ3.

நான் கோரியுள்ளவாறு இழப்பீடு வழங்குமாறு பிரார்த்திக்கிறேன்.

மனுவை அனுமதிக்குமாறு கோருகிறேன்.

**பார்வை அலுவலர் தரப்பில் குறுக்குவிசாரணை**

என் பெயர் தேவேந்திரன். நான் தான் தேவேந்திரன் என்பதற்கு ஆதாரத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பெலாகுப்பம் கிராமத்தில் எவ்வளவு இடம் பற்றுகை செய்யப்பட்டது என்றால் சுமார் 1000 ஏக்கர் பற்றுகை செய்யப்பட்டது. பெலாகுப்பம் கிராமத்தை சேர்ந்த நான் மட்டும் தான் இழப்பீடு கோரி மனு செய்துள்ளேனா அல்லது நிறைய பேர் தாக்கல 'செய்துள்ளார்களா என்றால் பல பேர் தாக்கல் செய்துள்ளார்கள். இழப்பீடு மதிப்பு சதுர மீட்டர் மதிப்பீடு செய்யப்பட்டதா என்றால் சதுர அடியில் 100 ரூபாயும் சென்ட் மதிப்பில் ரூ.6000/-ம் கொடுக்கப்பட்டது. சர்வே எண்.77ல் லட்சுமி நகருக்கும் எங்கள் நிலத்திற்கும் எவ்வளவு தெலைவு என்றால் 50 அடி தொலைவு இருக்கும். சார்பதிவாளர் கிராமத்தில் உள்ள அனைத்து நிலத்தையும் பார்வையிட்டு அதை மதிப்பிட்டு அனைவருக்கும் சரியான அளவு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சில சர்வே எண்கள் உள்ளே அமைந்துள்ளன. மெயின் ரோட்டில் எனது நிலம் அமைந்துள்ளது. என் நிலத்திற்கும் அவர்கள் நிலத்திற்கும் வித்தியாசம் உள்ளது. நிலத்தில் இரண்டு பக்கமும் மெயின் ரோடு உள்ளது. தேசிய நெடுஞ்சாலை அமைந்துள்ளது. அரசாங்கம் நிர்ணயித்த பணத்தை நான் வாங்கிகொண்டேனா என்றால் வாங்கிகொண்டேன். ஆட்சேபனையின் பேரில் வாங்கிகொண்டேன். அரசாங்கம் சரியாக மதிப்பீடு செய்து தான் எனக்கு பணம் கொடுக்கப்பட்டது என்றும் நான் தான் அரசாங்கம் தவறாக மதிப்பீடு செய்தது என்று இந்த வழக்கை தவறாக போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/- R.Poornima,
Principal Sessions Judge,
Villupuram.